**இலங்கை கோல்ப் சங்கம் - 2024**

**---------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கோல்ப் சங்கத்தின் (“சங்கம்”) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமான செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் 21அ பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சங்கத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான இலங்கை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கூற்றுக்கு இணங்க (எஸ்எல்எஸ்ஓஆர்பீ - என்பீஓஎஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான இலங்கை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கூற்றுக்கு இணங்க (எஸ்எல்எஸ்ஓஆர்பீ - என்பீஓஎஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சங்கத்தின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சங்கத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சங்கத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சங்கத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது

கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சங்கம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான இலங்கை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கூற்றுடன் இணக்கமின்மை

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரை |
|---|---|---|
| இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான இலங்கை பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைக்கூற்றின் பந்தி 6.1.7 இன் பிரகாரம், சங்கமானது இந்நியமத்தினால் தேவைப்படுத்தப்பட்டோ அல்லது அனுமதிக்கப்பட்டோ இருந்தாலே தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானம் மற்றும் செலவினங்கள் எதிரீடு செய்யக்கூடாது. அதற்கு முரணாக, 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யூனியன் வங்கி நடைமுறைக்கிலுள்ள சாதகமற்ற மீதி ரூபா 932,252 ஆனது சாதகமான வங்கி மீதிக்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் தேறிய பெறுமதி ரூபா 21,765,480 ஆனது காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக காட்டப்பட்டிருந்தது. | இதற்கான காரணம், வணிக வங்கியின் இச்சொத்துக்களானது ஓர் தனியான கணக்காக கருதப்பட்டிருந்தமையாகும். | சங்கமானது அதனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அல்லது வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பனவற்றை அவ்உருப்படிகளிற்கு எதிராக எதிரீடு செய்யக்கூடாது. |

#### 1.5.2 கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத ஆவணச் சான்றுகள்

| | உருப்படி | பெறுமதி<br>ரூபா | காணப்படாத ஆவணச் சான்று | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | பயிற்றுவிப்பு கட்டணங்கள் மற்றும் ஏனைய நிர்வாக செலவினங்கள். | 197,500 | பற்றுச்சீட்டுக்கள், பட்டியல்கள் | பரிந்துரைகள் கிடைக்கப்பெறவில்லை. | கொடுப்பனவுகளின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையினை உறுதிசெய்வதற்காக கொடுப்பனவு பற்றுச்சீட்டுகள் மற்றும் தொடர்புபட்ட துணை ஆவணங்கள் என்பனவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 19 கொடுப்பனவுகள் | 217,369 | அனுமதிகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தல்கள். | அக்காசுக்கொடுப்பனவுகள் பெறுவனவாளர்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது கையொப்பங்களும் பெறப்பட்டுள்ளன. | |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமானங்கள் என்பனவற்றுடன் இணக்கமின்மை மீதான நிகழ்வுகள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| இல | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2024 மே 03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல. 2382/32 இல் பிரசுரிக்கப்பட்ட 2024 01 ஆம் இலக்க விளையாட்டு துறை ஒழுங்குவிதிகளுக்கான தேசிய சங்கத்தின் பகுதி III இன் பிரிவு 6 (xxvii) | விளையாட்டு கழகங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் சங்கத்துடன் இணைக்கப்பட்ட உறுப்பின நிறுவனங்கள் போன்றோர்களின் தேர்தல்கள் போன்றன உள்ளடங்களாக, அனைத்து நடவடிக்கைகளினதும் விபரங்கள் விளையாட்டுத்துறையின் பணிப்பாளர் நாயகத்திற்கு வருடாந்தம் சமர்ப்பிக்கப்பட்டதாக கருதப்பட்டிருந்தும், அவ் விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கோல்ப் யாப்பானது அவ்வாறான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு உரிமைகள் அல்லது அதிகாரங்களை வழங்கவில்லை. | விளையாட்டுதுறை ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2022 மே 31 இல் விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கை இல 2022/02 இன் பிரிவு (2) | ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்குமான பற்றுச்சீட்டுக்களானது உரிய தரப்பினர்கள் அல்லது நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டியதுடன் அப்பற்றுச்சீட்டுக்களானது கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படலும் வேண்டும். இருப்பினும், மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,928,850 இற்கான பற்றுச்சீட்டுக்களை சங்கமானது வழங்கியிருக்கவில்லை. | உங்களது பரிந்துரைகள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2025.01.01 இலிருந்து வங்கி வைப்புக்களிற்கு பற்றுச்சீட்டுக்களை வழங்க ஆரம்பித்துள்ளோம். | சுற்றறிக்கை நிபந்தனைகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சங்கத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 460,505 ஆன குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டில் அதற்கு நேரொத்த குறை ரூபா 1,285,502 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 824,997 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அமெத்துவர் கோல்ப் சாம்பியன்சிப் வருமானமானது ரூபா 1,901,053 இனால் அதிகரித்திருந்தமையே இப் முன்னேற்றத்திற்கான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சங்கத்தினது செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்காக இலங்கையின் ஒவ்வொரு மாகாணங்களிலுமுள்ள ஒவ்வொரு மட்டத்திலும் இவ்விளையாட்டின் அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தல் மீதான செயலாற்றல் அறிக்கையானது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தேசிய விளையாட்டுத்துறை நாட்காட்டியின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 17 தேசிய விளையாட்டுத்துறை சுற்றுப்போட்டிகள் மற்றும் 11 சர்வதேச சுற்றுப்போட்டிகள் என்பனவற்றை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 09 தேசிய விளையாட்டுத்துறை சுற்றுப்போட்டிகள் மற்றும் 06 சர்வதேச சுற்றுப்போட்டிகள் போன்றன திட்டமிட்டபடி நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதில்கள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | திட்டமிடப்பட்ட படி சுற்றுப்போட்டிகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அரச பெறுகை வழிகாட்டிகளினை பின்பற்றாமல் ரூபா 3,859,884 பெறுமதியான விமானச்சீட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | பெரும்பாலான சந்தர்ப்பங்களில், விமானச்சீட்டுக்களை கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் குறுகிய கால அறிவிப்புடன் அவசர அடிப்படையில் எழுகின்றது. | பெறுகை வழிகாட்டிகள் பின்பற்றப்படல் வேண்டும். |